# இயற்கை வழி விவசாயம்

## நில மண்ணை செழிப்பாக்கும் திட்டம் - 4

## ‘வெட்டுப்புல் வளர்ப்பு’ தோட்டங்களாக உருவாகவேண்டும்.

இரசாயணத் தாக்குதல்களிலிருக்கும் நிலமண்ணை விடுவித்து செழிப்பானதாக்க மாற்ற எடுக்கும் முதல் முயற்சி மாட்டெருவின் (சாணகம்) கூடிய தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதே. அவ்வாறாயின் மாட்டு வளர்ப்பினை மக்களிடையே அதிகரிக்கச் செய்யவேண்டும்.

போதிய வருமானமின்றி வாழும் மக்களை வீட்டு வளவில் ஒரு முயற்சியாக மாடு வளர்ப்பை ஊக்குவிக்கலாம். தற்போது மாடு வணர்ப்பவர்கள் தரிசாகவுள்ள புல்பூண்டு முளைத்திருக்கும் இடங்களில் பகலில் மாடுகளைக் கட்டி மேய விட்டும் பின் வைக்கோல் தவிடு புண்ணாக்கு வேறும் சில தீன்வகைகளை உணவாக கொடுக்கின்றரகள். ஒரு சில மாடு வளர்ப்பவர்கள் வளவிலேயே இருக்கக்கூடிய நிலப்பரப்பில் வெட்டுப்புல் நாட்டி கிணற்றிலிருந்து நீர் இறைத்து அத்தண்ணீரில் சாணகத்தையும் கரைத்து நீர்ப்பாச்சி இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வெட்டக் கூடியதாக புல்லை உற்பத்தி செய்கின்றார்கள்.

மாடு வளர்ப்பில் ஈடுபடும் அத்தனை பேரிடமும் புல் வளர்க்ககூடிய நிலமிருக்காது. இதை நிவர்த்தி செய்ய புற்தோட்டங்கள் அமைக்கும் திட்டம் வகுக்கப்படுகின்றது. எங்கெங்கலாம் பற்தோட்டம் அமைக்கக்கூடிய நிலம் நீர் வசதியுள்ள இடங்கள் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் தனியார் புற்தோட்டங்கள் அமைக்கப்பட்டு வெட்டுப்புல்லை கட்டுகளாக்கி கிலோ கணக்கில் விற்பனை செய்ய முடியும். வெட்டுப்புல் தோட்டம் ஒரு பது உற்பத்தி முயற்சியாக வேலை வாய்ப்பின்றி வாழும் இளம் குடும்பங்கள் ஈடுபடக்கூடியதாக அமைக்கலாம். வெட்டுப்புல் விற்பனை மாடு வளர்ப்பவர்களுக்கு ஒரு சிறந்த அனுகூலமாக விளங்கும். வங்கிகள் மூலமாக கடன்களைப் பெற்று இந்த முயற்சியில் இறங்குவது மண்ணை செழிப்பாக்குதல் மட்டுமன்றி பால் உற்பத்தியை கூட்டுவதால் குழந்தைகளினதும் பிள்ளைகளினதும் ஆரோக்கியமும் ஏன் பெரியவர்களும் ஆராக்கியமாக வாழ வாழ்க்கையமையும்.